ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 31 சனவரி 2025 |


# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்

## திசெம்பர் 2024

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நடைமுறைக் கணக்கிற்கான வலுவான உட்பாய்ச்சல்கள் மற்றும் வலுவடைந்த ஒதுக்குகள் என்பவற்றுடன் இலங்கைப் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறையானது 2024இல் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது.

## தொழிலாளர் பணவனுப்பல்கள்

2024

ஐ.அ.டொ **6,575** மில்



10.1 %
2024

**தொழிலாளர் பணவனுப்பல்கள்** 2023 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 570 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 614 மில்லியனிற்கு அதிகரித்தன.

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




**சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது*

**மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் மத்திய வங்கியின் மூலம் வரலாற்று ரீதியாக மிகவும் உயர்ந்தளவிலான மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினால் ஆதரவளிக்கப்பட்டு 2024 இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிற்கு அதிகரித்தன.

## வணிகப்பொருள் வர்த்தகம்

**திசெ 2024**

ஏற்றுமதிகள்: ஐ.அ.டொ 1,102 மில்
இறக்குமதிகள்: ஐ.அ.டொ 1,924 மில்




**2024**

ஏற்றுமதிகள்: ஐ.அ.டொ 12,772 மில்
இறக்குமதிகள்: ஐ.அ.டொ 18,841 மில்




**வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது** (ஆண்டிற்காண்டு) 2024இல் விரிவடைந்தது. 2024 திசெம்பரிற்கான இறக்குமதிச் செலவினமானது 2024இல் மிகவும் உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினமாகக் காணப்பட்டது.

## சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்

**சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்** 2 மில்லியனிற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளின் வருகைகளுடன் 2024இல் ஐ.அ.டொலர் 3,169 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.




## செலாவணி வீதம்







## பணிகள் துறை




சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலாத்துறைசாராப் பணிகள் (போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற) ஆகிய இரண்டினதும் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் 2024இல் மேம்பட்ட செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தன.

## அரச பிணையங்கள் (தேறிய)

**அரச பிணையங்கள் சந்தையானது** 2024இல் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

தேறிய: ஐ.அ.டொ 18 மில்




உட்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொ 36 மில்
வெளிப்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொ 17 மில்

தேறிய: ஐ.அ.டொ -179 மில்




உட்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொ 334 மில்
வெளிப்பாய்ச்சல்கள்: ஐ.அ.டொ 513 மில்

## கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை (தேறிய)

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள்** முதலாந்தரச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளினால் அநேகமாக உந்தப்பட்டு 2024இல் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

தேறிய: ஐ.அ.டொ -2 மில்
தேறிய: ஐ.அ.டொ 33 மில்



## வணிகப்பொருள் வர்த்தக மீதி

2024இல் ஒன்றுசேர்ந்த வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4,900 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 6,069 மில்லியனிற்கு விரிவடைந்தது. இறக்குமதிச் செலவினத்தின் பாரியளவிலான விரிவாக்கமானது ஏற்றுமதி வருவாய்களின் விரிவாக்கத்தினை விஞ்சிக் காணப்பட்டமையானது 2024இலும் 2024 திசெம்பரிலும் உயர்ந்தளவிலான வர்த்தகப் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

**வரைபடம் 1: மாதாந்த ஏற்றுமதி வருவாய்கள்**




**வரைபடம் 2: மாதாந்த இறக்குமதிச் செலவினம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 7.2 சதவீதத்தினால் அதிகரித்து, ஐ.அ.டொலர் 12,772 மில்லியன் தொகையினை எட்டியதுடன், இது வரலாற்றில் இரண்டாவது மிகவும் உயர்ந்தளவிலான ஏற்றுமதி வருவாய்களாகக் காணப்படுகின்றது.** முதலாவது தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் தொகையினை விஞ்சிக் காணப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்களினால் (உயர்ந்தளவிலான நீர்க்கல எரிபொருள் அளவுகளின் காரணமாக) இவ்வதிகரிப்பானது உந்தப்பட்டது. புடவைகள் மற்றும் ஆடைகள் அதிகரித்ததுடன் 2022இற்குப் பின்னர் ஐ.அ.டொலர் 5 பில்லியன் தொகையினைக் கொண்ட எல்லையினை விஞ்சிக் காணப்பட்டது. மேலும், தேயிலை, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தெங்குசார் உற்பத்திகள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பன 2024இல் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டின. இருப்பினும், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் மற்றும் பொறி மற்றும் பொறியியல் சாதனங்கள் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2024இல் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.

அதேவேளை, கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஆகிய இரண்டினதும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியினால் ஆதரவளிக்கப்பட்டு வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,102 மில்லியனிற்கு அதிகரித்தன. 2024 திசெம்பரில் **கைத்தொழில் பொருட்கள்** ஏற்றுமதிகளின் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பானது நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிகளின் உயர்ந்த அளவுகளின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளினால் முதன்மையாக உந்தப்பட்டுக் காணப்பட்டது. உயர்ந்தளவிலான தேயிலை ஏற்றுமதிகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் தெங்குசார் உற்பத்திகள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு **வேளாண்மைப் பொருட்களின்** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2024 திசெம்பரில் அதிகரித்தன.

[1] இலங்கை மத்திய வங்கியின் வணிகப்பொருள் வர்த்தகத்தின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II, இணைப்பு III, இணைப்பு IV மற்றும் இணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 3: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**

**2024 திசெம்பர்: ஐ.அ.டொலர் 1,102 மில்**

2023 திசெம்பர்: ஐ.அ.டொலர் 1,002 மில்




**2024: ஐ.அ.டொலர் 12,772 மில்**

2023: ஐ.அ.டொலர் 11,911 மில்




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[1]

சகல முக்கிய இறக்குமதி வகைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சியினால் உந்தப்பட்டு, வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2024இல் ஐ.அ.டொலர் 18,841 மில்லியனாக விளங்கி 12.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்தது. பொறி மற்றும் சாதனங்கள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், இரசாயன உற்பத்திகள், அடிப்படை உலோகங்கள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன. உணவு மற்றும் குடிபானங்களுடன் தொடர்புடைய நுகர்வுப் பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் (முக்கியமாக வீட்டுச்சாதனப் பொருட்கள்) 2024இல் அதிகரித்தன. இருப்பினும், தாழ்ந்த மசகெண்ணெய் மற்றும் நிலக்கரி இறக்குமதிகளினால் உந்தப்பட்டு எரிபொருள் இறக்குமதிகள் 2024இல் கணிசமானளவிலான வீழ்ச்சியொன்றினைக் கொண்டிருந்தன.

**வரைபடம் 4: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**

**2024 திசெம்பர்: ஐ.அ.டொலர் 1,924 மில்**

2023 திசெம்பர்: ஐ.அ.டொலர் 1,489 மில்




**2024: ஐ.அ.டொலர் 18,841 மில்**

2023: ஐ.அ.டொலர் 16,811 மில்




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, சகல முக்கிய இறக்குமதி வகைகளிலும் ஏற்பட்ட உயர்ந்தளவிலான செலவினத்தினால் உந்தப்பட்டு வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினமும் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 1,924 மில்லியனிற்கு அதிகரித்து, 2024இற்கான உயர்ந்தளவிலான மாதாந்த இறக்குமதிகளைப் பதிவுசெய்தது. உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் மீதான அதிகரித்தளவிலான செலவிடலின் காரணமாக 2024 திசெம்பரில் **நுகர்வுப் பொருட்கள்** இறக்குமதிகள் அதிகரித்தன. அதேவேளை, கோதுமை மற்றும் சோளம், எரிபொருள் மற்றும் அடிப்படை உலோகங்கள் என்பவற்றில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்புக்களுடன் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்களின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வளர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொறி மற்றும் சாதனங்களின் குறிப்பாக, பொறியியல் சாதனங்களின் (பாரம்தூக்கிகள் போன்ற) உயர்ந்தளவிலான இறக்குமதிகளினால் உந்தப்பட்டு **முதலீட்டுப் பொருட்கள்** மீதான செலவினமும் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்[2]

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற **வர்த்தக மாற்று விகிதமானது** 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் 85.5 சுட்டெண் புள்ளிகளிற்குச் சிறியளவு தேய்வடைந்தது. 2023 உடன் ஒப்பிடுகையில் 2024இல் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 12.9 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 5.0 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேபோன்று, 2024இல் இறக்குமதி அளவுச் சுட்டெண் 17.9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் இறக்குமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 4.9 சதவீதத்தினால் குறைவடைந்தது.

அதேவேளை, ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டதுடன் வர்த்தக மாற்று விகிதமானது 2023 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பரில் 6.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது. ஏற்றுமதி அளவுச் சுட்டெண் மேம்பட்ட வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தமையானது ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பானது உயர்ந்தளவிலான ஏற்றுமதி அளவுகளினால் முக்கியமாக உந்தப்பட்டமையினைச் சுட்டிக்காட்டியது. அதேபோன்று, இறக்குமதி அளவுச் சுட்டெண் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தமையானது இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது உயர்ந்தளவிலான இறக்குமதி அளவுகளினால் செல்வாக்கிற்குட்பட்டதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 5: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 6: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

[2] ஐ.அ.டொலர் நியதிகளில்

## பணிகள் துறைச் செயலாற்றம்[3]

**சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்:** சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,068 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 3,169 மில்லியனாக மதிப்பிடப்பட்டு 53.2 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. 2024 திசெம்பரில் சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 362 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**வரைபடம் 8: சுற்றுலாத்துறையிலிருந்தான மாதாந்த வருவாய்கள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**ஏனைய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள்[4]:** சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக பணிகள் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3,348 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 3,714 மில்லியனாகக் காணப்பட்டன. கடல் போக்குவரத்துப் பணிகள் மற்றும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் என்பன 2024இல் பதிவுசெய்யப்பட்ட உட்பாய்ச்சல்களிற்கான முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன. சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக பணிகள் துறைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 335 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 10: முக்கிய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள் (சுற்றுலாத்துறை வருவாய்கள் நீங்கலாக)**

**2024 திசெம்பர்: ஐ.அ.டொலர் 335 மில்**

2023 திசெம்பர்: ஐ.அ.டொலர் 266 மில்




**2024: ஐ.அ.டொலர் 3,714 மில்**

2023: ஐ.அ.டொலர் 3,348 மில்




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

---

[3]இலங்கை மத்திய வங்கி அதன் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அடிப்படையிலமைந்த மிகவும் விரிவான மாதாந்த பணிகள் துறைப் புள்ளிவிபரங்களை 2024 சனவரியிலிருந்து அறிக்கையிடுகின்றது.

[4] தற்காலிகமானது

**பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்[5]:** பணிகள் துறைக்கான மொத்த வெளிப்பாய்ச்சல்கள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 2,363 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 3,228 மில்லியனாகக் காணப்பட்டன. வெளிநாட்டுப் பயணம் மற்றும் விமானப் போக்குவரத்துப் பணிகள் என்பன 2024இல் பணிகள் துறையிலிருந்து பதிவுசெய்யப்பட்ட வெளிப்பாய்ச்சல்களிற்கான முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன. மொத்த பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 328 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 11: முக்கிய பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்**

**2024 திசெம்பர்: ஐ.அ.டொலர் 328 மில்**
2023 திசெம்பர்: ஐ.அ.டொலர் 206 மில்

**2024: ஐ.அ.டொலர் 3,228 மில்**
2023: ஐ.அ.டொலர் 2,363 மில்




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

## தொழிலாளர் பணவனுப்பல்கள்

தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 5,970 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ஐ.அ.டொலர் 6,575 மில்லியனாக விளங்கி 10.1 சதவீத ஆண்டிற்காண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 614 மில்லியன் தொகையாகக் காணப்பட்டன.

**வரைபடம் 12: மாதாந்த தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

[5] தற்காலிகமானது

## நிதியியல் பாய்ச்சல்கள்

அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றுசேர்ந்த வெளிநாட்டு முதலீடுகள் 2024இல் ஐ.அ.டொலர் 179 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இருப்பினும், ஆண்டின் இறுதி மூன்று மாத காலப்பகுதியில் தேறிய உட்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டதுடன் 2024 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட தேறிய உட்பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 18 மில்லியனாக விளங்கியது. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர ஆகிய இரண்டு சந்தைக் கொடுக்கல்வாங்கல்களும் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் முதலாந்தரச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளினால் அநேகமாக உந்தப்பட்டு 2024இல் ஐ.அ.டொலர் 33 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. இருப்பினும், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2024 திசெம்பரில் ஐ.அ.டொலர் 2 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

2024 காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் மூலம் வரலாற்று ரீதியாக மிகவும் உயர்ந்தளவிலான மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தேறிய கொள்வனவுகளினாலும் பல்புடை நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியங்களினாலும் ஆதரவளிக்கப்பட்டு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனாக விளங்கின. இருப்பினும், வெளிநாட்டு வர்த்தகப் படுகடன் மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் முக்கிய காரணமாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 நவெம்பர் இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.1 பில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. 2024 திசெம்பரில் 3 ஆண்டுகளிற்குப் புதுப்பிக்கப்பட்ட சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் உள்ளடக்கின்றன. அதேவேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கமானது (சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) 2024 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு 3.9 மாதங்களாகக் காணப்பட்டது.

**வரைபடம் 13: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமாந்தன்மை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**2024இல் 10.7 சதவீத பெறுமதியுயர்வொன்றினைத் தொடர்ந்து, இலங்கை ரூபாவானது 2025 சனவரி மாத காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 1.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது.** அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2025 சனவரியில் இலங்கை ரூபாவானது ஏனைய முக்கிய நாணயங்களிற்கெதிராகத் தேய்வடைந்தது. 2024 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் பெயரளவு உயர்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில், 24 நாணயங்களின் கூடைக்கெதிராக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் (REER 24) உயர்வடைந்தது. இதற்கமைய, 24 நாணயங்களின் கூடைக்கெதிராக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் (2017=100) 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 70.2 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 2024 இறுதியில் 76.7 சுட்டெண் புள்ளிகளிற்கு அதிகரித்தமையானது காலப்பகுதியில் வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையில் ஏற்பட்டுள்ள குறைவொன்றினைப் பிரதிபலிக்கின்றது.

**வரைபடம் 14: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 15: வெளிநாட்டு செலாவணி வீத மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு (திசெ 23 இறுதி – திசெ 24 இறுதி)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2023 | 2024 | 2025 (சனவரி 31 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | +12.1% | +10.7% | -1.7% |
| யூரோ | +7.9% | +17.8% | -1.5% |
| ஸ்ரேலிங் பவுன் | +6.0% | +12.3% | -0.6% |
| சீன யுவான் (ரென்மின்பி) | +14.3% | +13.9% | -2.3% |
| யப்பானிய யென் | +19.5% | +22.5% | -3.2% |
| அவுஸ்திரேலிய டொலர் | +10.8% | +21.7% | -1.5% |
| இந்திய ரூபா | +12.6% | +13.9% | -0.4% |

*தேய்வு(-)/உயர்வு(+)

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

*முன்கூட்டி வெளியிடப்படும் நாட்காட்டியின்படி, 2025 சனவரி மாதத்திற்கான வெளிநாட்டுத்துறை ஊடக அறிக்கை வெளியீடு **2025 பெப்புருவரி 28** அன்று வெளியிடப்படும்.*

இணைப்பு I:

## வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)

| வகை | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 1,001.8 | 1,101.8 | 10.0 | 11,910.7 | 12,772.0 | 7.2 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,488.6 | 1,924.5 | 29.3 | 16,811.1 | 18,841.4 | 12.1 |
| வர்த்தக மீதி | -486.8 | -822.7 | | -4,900.4 | -6,069.4 | |
| பணிகள் கணக்கு மீதி (தேறிய) | 329.0 | 369.3 | 12.3 | 3,053.0 | 3,654.5 | 19.7 |
| பணிகள் உட்பாய்ச்சல்கள் | 535.0 | 696.9 | 30.2 | 5,416.3 | 6,883.0 | 27.1 |
| *இதில்,* | | | | | | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 269.3 (ஆ) | 362.1 (இ) | 34.5 | 2,068.0 (ஆ) | 3,168.6 (இ) | 53.2 |
| கடல் போக்குவரத்து | 63.9 | 117.0 | 83.0 | 813.5 | 1,177.3 | 44.7 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள | 71.3 | 75.4 | 5.7 | 794.9 | 848.4 | 6.7 |
| வான் போக்குவரத்து | 47.6 | 35.0 | -26.4 | 735.7 | 588.6 | -20.0 |
| பணிகள் வெளிப்பாய்ச்சல்கள் | 206.0 | 327.6 | 59.0 | 2,363.3 | 3,228.4 | 36.6 |
| *இதில்,* | | | | | | |
| வெளிநாட்டுப் பயணம் | 36.7 | 80.6 | 119.8 | 503.1 | 755.4 | 50.2 |
| கடல் போக்குவரத்து | 35.3 | 56.7 | 60.5 | 285.9 | 441.1 | 54.3 |
| வான் போக்குவரத்து | 35.4 | 53.5 | 51.3 | 439.9 | 569.7 | 29.5 |
| தொழில்நுட்ப, வர்த்தகம் தொடர்பான மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 17.1 | 30.5 | 78.6 | 149.7 | 269.5 | 80.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 569.7 | 613.8 | 7.7 | 5,969.6 | 6,575.4 | 10.1 |
| தனிநபர் பரிமாற்றல் வெளிப்பாய்ச்சல்கள் | 11.7 | 9.1 | -22.3 | 155.0 | 145.9 | -5.9 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய பாய்ச்சல்கள் (ஈ) | -1.7 | -1.6 | | 18.2 | 33.0 | |
| அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய பாய்ச்சல்கள் | -22.7 | 18.4 | | 210.0 | -178.9 | |
| திரண்ட நிலுவை | | | | 2,825.6 | 2,890.4 | |
| ***ஞாபகார்த்த விடயங்கள்*** | | | | | | |
| சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் (எண்ணிக்கை) | 210,352 | 248,592 | | 1,487,303 | 2,053,465 | |
| வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் (எண்ணிக்கை) | 22,743 | 22,321 | | 297,305 | 313,642 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2023இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டின் அடிப்படையிலானது
(இ) 2024இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டின் அடிப்படையிலானது
(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலிற்கமைய ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **790.9** | **841.5** | **6.4** | **9,277.7** | **9,946.9** | **7.2** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 44.3 | 57.6 | 29.9 | 539.3 | 651.5 | 20.8 |
| விலங்குத்தீன் | 9.5 | 12.1 | 27.3 | 145.6 | 133.4 | -8.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 439.9 | 447.6 | 1.7 | 4,878.9 | 5,061.0 | 3.7 |
| இதில் ஆடைகள் | 407.7 | 415.8 | 2.0 | 4,440.6 | 4,660.1 | 4.9 |
| புடவைகள் | 23.8 | 23.0 | -3.6 | 338.1 | 294.5 | -12.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் | 8.4 | 8.8 | 4.6 | 100.2 | 106.4 | 6.3 |
| இறப்பர் உற்பத்திகள் | 78.1 | 78.3 | 0.3 | 902.2 | 975.6 | 8.1 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.5 | 16.4 | -33.2 | 500.0 | 381.9 | -23.6 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 43.1 | 39.5 | -8.2 | 598.2 | 485.5 | -18.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 5.7 | 8.0 | 39.6 | 149.3 | 107.0 | -28.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 61.1 | 87.9 | 43.9 | 539.4 | 1,063.5 | 97.2 |
| இரசாயன உற்பத்திகள் | 16.7 | 21.5 | 28.2 | 193.5 | 234.1 | 21.0 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.2 | 9.8 | -4.3 | 114.0 | 123.6 | 8.4 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 3.4 | 2.9 | -14.5 | 55.1 | 47.5 | -13.9 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 4.8 | 4.8 | 0.3 | 71.2 | 62.2 | -12.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 4.6 | 4.5 | -3.8 | 56.3 | 53.8 | -4.4 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.6 | 15.5 | 5.9 | 178.3 | 186.8 | 4.8 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.0 | 2.0 | -33.0 | 34.0 | 32.1 | -5.6 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 27.2 | 33.2 | 22.0 | 322.5 | 347.3 | 7.7 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **206.6** | **256.5** | **24.2** | **2,566.5** | **2,774.5** | **8.1** |
| தேயிலை | 111.1 | 131.6 | 18.4 | 1,309.9 | 1,435.9 | 9.6 |
| இறப்பர் | 1.5 | 2.4 | 60.6 | 28.0 | 26.0 | -7.4 |
| தேங்காய் | 23.2 | 36.0 | 55.2 | 336.8 | 416.5 | 23.7 |
| வாசனைத்திரவியங்கள் | 31.3 | 46.7 | 49.5 | 392.9 | 454.7 | 15.7 |
| காய்கறிகள் | 2.4 | 2.9 | 22.0 | 27.7 | 28.5 | 3.1 |
| பதப்படுத்தப்படாத புகையிலை | 4.0 | 3.3 | -16.2 | 28.1 | 25.7 | -8.4 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 9.4 | 13.4 | 43.3 | 180.9 | 154.2 | -14.8 |
| கடலுணவு | 23.8 | 20.1 | -15.4 | 262.2 | 233.0 | -11.2 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.0** | **1.6** | **-20.5** | **38.5** | **24.5** | **-36.2** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **2.3** | **2.2** | **-6.0** | **28.0** | **26.1** | **-6.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,001.8** | **1,101.8** | **10.0** | **11,910.7** | **12,772.0** | **7.2** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **224.8** | **273.8** | **21.8** | **2,761.0** | **2,998.1** | **8.6** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 26.9 | 24.9 | -7.6 | 301.7 | 284.1 | -5.8 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 6.0 | 6.3 | 5.0 | 77.6 | 74.1 | -4.5 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 33.6 | 44.0 | 30.8 | 430.6 | 489.5 | 13.7 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 143.6 | 179.2 | 24.8 | 1,701.3 | 1,891.6 | 11.2 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **15.4** | **17.3** | **11.9** | **158.5** | **165.6** | **4.5** |
| 11 குடிபானங்கள் | 4.9 | 6.6 | 33.4 | 64.3 | 74.4 | 15.8 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 10.5 | 10.7 | 1.8 | 94.2 | 91.1 | -3.3 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **22.2** | **29.4** | **32.7** | **380.5** | **375.6** | **-1.3** |
| 23 மசகு இறப்பர் | 1.7 | 2.5 | 52.3 | 29.5 | 27.5 | -6.8 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 10.3 | 16.8 | 63.7 | 210.7 | 222.5 | 5.6 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **61.1** | **87.9** | **43.9** | **539.4** | **1,063.4** | **97.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 61.1 | 76.2 | 24.8 | 539.4 | 939.2 | 74.1 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | | 11.7 | | | 124.3 | |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **5.4** | **11.4** | **108.7** | **69.6** | **95.3** | **37.0** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 5.3 | 8.4 | 58.3 | 67.5 | 83.6 | 23.9 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **19.0** | **25.2** | **32.5** | **234.2** | **281.1** | **20.0** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **138.6** | **124.3** | **-10.3** | **1,875.8** | **1,782.8** | **-5.0** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 57.9 | 50.6 | -12.6 | 675.1 | 695.8 | 3.1 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 31.3 | 30.2 | -3.4 | 398.9 | 384.9 | -3.5 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 28.9 | 22.2 | -23.1 | 559.2 | 445.2 | -20.4 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **47.8** | **46.4** | **-2.9** | **730.9** | **578.8** | **-20.8** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 23.6 | 24.1 | 2.2 | 352.8 | 284.1 | -19.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **467.5** | **486.1** | **4.0** | **5,160.4** | **5,431.1** | **5.2** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 431.9 | 447.3 | 3.6 | 4,713.8 | 4,978.7 | 5.6 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.1** | | | **0.4** | **0.3** | **-24.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,001.8** | **1,101.8** | **10.0** | **11,910.7** | **12,772.0** | **7.2** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியின் வகைப்படுத்தலிற்கமைய இறக்குமதிச் செலவினம் (அ)**

| வகை | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **272.8** | **397.6** | **45.8** | **3,043.9** | **3,465.7** | **13.9** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 152.0 | 242.5 | 59.6 | 1,693.0 | 1,914.3 | 13.1 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 8.2 | 48.6 | 490.8 | 116.9 | 163.2 | 39.6 |
| பால் உற்பத்திகள் | 16.9 | 30.3 | 79.1 | 273.7 | 239.7 | -12.4 |
| காய்கறிகள் (ஆ) | 32.1 | 48.6 | 51.7 | 358.6 | 446.0 | 24.4 |
| கடலுணவு | 8.0 | 9.9 | 23.1 | 79.4 | 118.8 | 49.5 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 45.2 | 43.5 | -3.6 | 435.5 | 389.5 | -10.6 |
| வாசனைத்திரவியங்கள் | 11.8 | 12.1 | 2.8 | 133.4 | 115.7 | -13.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 29.9 | 49.5 | 65.7 | 295.5 | 441.4 | 49.4 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 120.8 | 155.1 | 28.4 | 1,350.9 | 1,551.4 | 14.8 |
| தனியாள் ஊர்திகள் | 3.1 | 3.5 | 14.0 | 27.7 | 66.2 | 139.2 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 46.7 | 60.5 | 29.5 | 667.0 | 575.6 | -13.7 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 9.2 | 13.6 | 47.4 | 72.4 | 155.6 | 115.1 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 15.0 | 25.0 | 66.0 | 170.0 | 225.8 | 32.8 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 12.1 | 12.5 | 3.2 | 98.8 | 141.9 | 43.6 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 15.5 | 14.1 | -8.9 | 122.1 | 138.1 | 13.1 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 19.1 | 25.8 | 35.4 | 192.9 | 248.1 | 28.6 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **948.3** | **1,124.9** | **18.6** | **11,006.6** | **11,914.5** | **8.2** |
| எரிபொருள் | 414.2 | 434.0 | 4.8 | 4,702.6 | 4,354.4 | -7.4 |
| இதில் மசகெண்ணெய் | 142.3 | 113.9 | -20.0 | 1,137.5 | 863.6 | -24.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 232.6 | 262.8 | 13.0 | 3,095.4 | 3,173.3 | 2.5 |
| நிலக்கரி | 39.2 | 57.4 | 46.3 | 469.8 | 317.4 | -32.4 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 30.7 | 16.7 | -45.6 | 268.4 | 216.9 | -19.2 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 183.2 | 252.6 | 37.9 | 2,371.2 | 2,847.1 | 20.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 35.1 | 36.4 | 3.7 | 412.4 | 447.0 | 8.4 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.9 | 25.1 | 32.7 | 233.8 | 263.8 | 12.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 19.9 | 58.3 | 192.2 | 338.2 | 382.5 | 13.1 |
| அடிப்படை உலோகங்கள் | 21.8 | 39.3 | 80.5 | 313.8 | 473.4 | 50.8 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 41.5 | 54.9 | 32.4 | 474.6 | 609.3 | 28.4 |
| இரசாயன உற்பத்திகள் | 72.1 | 76.8 | 6.5 | 814.7 | 987.0 | 21.2 |
| வளமாக்கி | 34.5 | 27.2 | -21.3 | 235.0 | 201.1 | -14.4 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 23.2 | 24.8 | 6.8 | 200.2 | 316.5 | 58.1 |
| கனிம உற்பத்திகள் | 5.9 | 8.3 | 41.0 | 80.9 | 127.2 | 57.3 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 47.4 | 70.5 | 48.9 | 560.7 | 688.3 | 22.7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **267.1** | **396.6** | **48.5** | **2,744.6** | **3,448.2** | **25.6** |
| பொறி மற்றும் கருவிகள் | 174.9 | 290.3 | 66.0 | 1,867.6 | 2,363.1 | 26.5 |
| கட்டடப் பொருட்கள் | 69.6 | 89.1 | 28.1 | 775.1 | 927.2 | 19.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 22.2 | 16.9 | -24.0 | 98.5 | 154.8 | 57.1 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.4 | 0.3 | -39.5 | 3.3 | 3.1 | -6.6 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.3** | **5.4** | **1,450.6** | **16.0** | **13.0** | **-18.8** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,488.6** | **1,924.5** | **29.3** | **16,811.1** | **18,841.4** | **12.1** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,074.4** | **1,490.5** | **38.7** | **12,108.5** | **14,487.0** | **19.6** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு V:**

## நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **179.5** | **302.0** | **68.3** | **2,186.1** | **2,395.8** | **9.6** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 18.7 | 30.3 | 62.0 | 289.6 | 246.0 | -15.1 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 8.1 | 10.0 | 22.9 | 80.5 | 120.4 | 49.4 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 27.8 | 106.8 | 283.8 | 452.7 | 541.6 | 19.6 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 37.3 | 55.1 | 47.6 | 402.4 | 513.8 | 27.7 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 45.2 | 43.5 | -3.6 | 435.6 | 389.5 | -10.6 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 15.7 | 19.7 | 25.4 | 180.8 | 188.7 | 4.3 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **11.3** | **14.5** | **27.7** | **122.0** | **123.0** | **0.8** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **30.0** | **37.5** | **24.8** | **328.8** | **458.3** | **39.4** |
| 23 மசகு இறப்பர் | 20.0 | 20.1 | 0.6 | 157.3 | 269.0 | 70.9 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 0.4 | 1.2 | 208.6 | 33.5 | 16.6 | -50.4 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **414.2** | **434.0** | **4.8** | **4,702.6** | **4,354.4** | **-7.4** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 345.2 | 333.6 | -3.4 | 3,948.0 | 3,660.4 | -7.3 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 29.7 | 43.1 | 44.8 | 284.9 | 376.6 | 32.2 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **18.1** | **37.0** | **104.1** | **162.9** | **285.9** | **75.5** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 17.3 | 35.5 | 105.7 | 151.1 | 268.1 | 77.4 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **191.9** | **215.3** | **12.2** | **2,150.5** | **2,330.1** | **8.3** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 44.0 | 56.6 | 28.7 | 618.4 | 525.2 | -15.1 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 34.5 | 27.2 | -21.3 | 234.8 | 200.2 | -14.8 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 28.2 | 34.7 | 23.1 | 308.6 | 410.8 | 33.1 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 10.0 | 15.7 | 57.4 | 131.9 | 150.1 | 13.8 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **358.1** | **453.3** | **26.6** | **4,267.8** | **5,102.3** | **19.6** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 34.5 | 35.3 | 2.5 | 399.1 | 426.8 | 6.9 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 179.6 | 247.4 | 37.7 | 2,300.6 | 2,784.4 | 21.0 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 50.5 | 40.7 | -19.5 | 488.9 | 506.3 | 3.6 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 28.3 | 52.6 | 85.5 | 428.4 | 608.7 | 42.1 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **217.3** | **332.3** | **53.0** | **2,137.9** | **2,908.8** | **36.1** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 29.2 | 41.1 | 40.9 | 264.1 | 384.2 | 45.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 35.8 | 125.5 | 250.3 | 359.4 | 736.5 | 104.9 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 14.3 | 23.4 | 63.7 | 146.2 | 185.9 | 27.1 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 27.3 | 29.3 | 7.3 | 266.7 | 369.9 | 38.7 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 38.1 | 52.3 | 37.3 | 541.8 | 603.0 | 11.3 |
| 78 வீதி ஊர்திகள் | 12.9 | 24.3 | 88.1 | 140.4 | 225.4 | 60.5 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **67.7** | **93.2** | **37.7** | **738.6** | **868.5** | **17.6** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 12.6 | 22.5 | 78.4 | 146.3 | 198.0 | 35.3 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 15.1 | 24.2 | 60.2 | 159.2 | 168.0 | 5.5 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.4** | **5.4** | **1,174.3** | **13.8** | **14.2** | **2.7** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,488.6** | **1,924.5** | **29.3** | **16,811.1** | **18,841.4** | **12.1** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு VI:**

## பணிகள் கணக்கு – உட்பாய்ச்சல்கள் (அ)

| | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **535.0** | **696.9** | **30.2** | **5,416.3** | **6,883.0** | **27.1** |
| **தயாரிப்புப் பணிகள்** | **1.0** | **1.3** | **29.3** | **17.0** | **27.4** | **60.5** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **3.7** | **1.2** | **-67.1** | **44.7** | **55.7** | **24.7** |
| **போக்குவரத்து** | **111.6** | **152.1** | **36.3** | **1,549.7** | **1,766.8** | **14.0** |
| கடல் போக்குவரத்து | 63.9 | 117.0 | 83.0 | 813.5 | 1,177.3 | 44.7 |
| பயணிகள் | 0.01 | 0.1 | | 0.1 | 1.4 | |
| கப்பல் கட்டணங்கள் | 39.7 | 86.4 | 117.7 | 432.3 | 770.2 | 78.2 |
| ஏனையவை | 24.2 | 30.5 | 26.0 | 381.1 | 405.7 | 6.5 |
| வானூர்தி போக்குவரத்து | 47.6 | 35.0 | -26.4 | 735.7 | 588.6 | -20.0 |
| பயணிகள் | 22.2 | 20.6 | -7.1 | 304.2 | 281.1 | -7.6 |
| விமான கட்டணங்கள் | 1.4 | 4.2 | 198.5 | 80.9 | 51.4 | -36.5 |
| ஏனையவை | 23.9 | 10.2 | -57.4 | 350.6 | 256.2 | -26.9 |
| தபால் பணிகள் | 0.1 | 0.1 | 33.7 | 0.5 | 0.8 | 74.4 |
| **பயணம்** | **269.3** | **362.1** | **34.5** | **2,068.0** | **3,168.6** | **53.2** |
| **கட்டடவாக்கம்** | **22.4** | **11.4** | **-49.0** | **354.8** | **212.2** | **-40.2** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 4.8 | 0.7 | -85.0 | 40.4 | 19.5 | -51.7 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 11.6 | 2.8 | -76.2 | 180.2 | 100.1 | -44.4 |
| கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 6.0 | 7.9 | 33.4 | 134.3 | 92.6 | -31.0 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **2.3** | **0.5** | **-77.2** | **34.7** | **23.7** | **-31.5** |
| நேரடி காப்புறுதி | 2.3 | 0.5 | -77.2 | 31.5 | 20.8 | -33.9 |
| மீள்காப்புறுதி | 0.02 | 0.003 | -80.2 | 3.2 | 2.9 | -7.7 |
| **நிதியியல் பணிகள்** | **6.7** | **2.5** | **-62.7** | **64.0** | **55.2** | **-13.7** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **1.8** | **1.1** | **-37.2** | **14.8** | **7.2** | **-51.1** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **78.3** | **89.6** | **14.4** | **916.7** | **971.5** | **6.0** |
| தொலைத்தொடர்பு பணிகள் | 7.0 | 14.2 | 103.0 | 121.8 | 123.1 | 1.0 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 71.3 | 75.4 | 5.7 | 794.9 | 848.4 | 6.7 |
| கணனி பணிகள் | 70.7 | 74.0 | 4.6 | 787.4 | 840.9 | 6.8 |
| தகவல் பணிகள் | 0.6 | 1.4 | 139.5 | 7.5 | 7.5 | -0.4 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **31.5** | **71.8** | **127.8** | **310.2** | **540.2** | **74.1** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 1.4 | 4.9 | 257.6 | 20.0 | 49.4 | 147.6 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 13.6 | 29.9 | 120.5 | 128.6 | 223.8 | 74.0 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 16.6 | 37.0 | 123.0 | 161.7 | 267.0 | 65.2 |
| **பிரத்தியேக, கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **4.5** | **1.7** | **-62.0** | **35.3** | **18.7** | **-47.0** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 1.5 | 0.8 | -45.7 | 4.0 | 7.8 | 95.4 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 3.1 | 0.9 | -69.8 | 31.4 | 11.0 | -65.1 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **2.0** | **1.5** | **-23.9** | **6.5** | **35.8** | **448.6** |

அ) தற்காலிகமானது. பயண உட்பாய்ச்சல்கள் நீங்கலாக அனைத்துத் தரவுகளும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமைத் தரவுகளின் அடிப்படையிலமைந்துள்ளன. பயண உட்பாய்ச்சல் தரவுகள் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையிலமைந்துள்ளன.

**மூலங்கள்:** இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு VII:

### பணிகள் கணக்கு – வெளிப்பாய்ச்சல்கள் (அ)

| | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **206.0** | **327.6** | **59.0** | **2,363.3** | **3,228.4** | **36.6** |
| **தயாரிப்புப் பணிகள்** | **15.0** | **10.9** | **-27.5** | **194.2** | **213.2** | **9.7** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **0.1** | **4.4** | | **8.0** | **18.9** | **137.0** |
| **போக்குவரத்து** | **71.5** | **111.5** | **55.9** | **732.0** | **1,017.2** | **38.9** |
| கடல் போக்குவரத்து | 35.3 | 56.7 | 60.5 | 285.9 | 441.1 | 54.3 |
| பயணிகள் | 0.01 | 0.05 | 387.6 | 3.1 | 1.2 | -60.8 |
| கப்பல் கட்டணங்கள் | 33.8 | 50.9 | 50.6 | 252.0 | 410.7 | 63.0 |
| ஏனையவை | 1.5 | 5.8 | 282.1 | 30.8 | 29.2 | -5.3 |
| வானூர்தி போக்குவரத்து | 35.4 | 53.5 | 51.3 | 439.9 | 569.7 | 29.5 |
| பயணிகள் | 15.5 | 18.3 | 17.7 | 241.5 | 278.6 | 15.4 |
| விமான கட்டணங்கள் | 6.5 | 27.6 | 323.6 | 78.1 | 172.9 | 121.3 |
| ஏனையவை | 13.3 | 7.7 | -42.3 | 120.3 | 118.2 | -1.7 |
| தபால் பணிகள் | 0.8 | 1.2 | 50.5 | 6.2 | 6.3 | 1.8 |
| **பயணம்** | **36.7** | **80.6** | **119.8** | **503.1** | **755.4** | **50.2** |
| **கட்டடவாக்கம்** | **7.0** | **8.4** | **20.2** | **110.6** | **126.6** | **14.4** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 0.001 | 0.7 | | 1.3 | 30.8 | |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 2.9 | 0.4 | -84.9 | 63.5 | 13.8 | -78.2 |
| கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 4.1 | 7.3 | 77.1 | 45.9 | 81.9 | 78.6 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **2.7** | **4.1** | **48.7** | **51.1** | **57.3** | **12.0** |
| நேரடி காப்புறுதி | 1.0 | 1.1 | 7.4 | 10.9 | 11.5 | 5.2 |
| மீள்காப்புறுதி | 1.8 | 3.0 | 71.8 | 40.2 | 45.8 | 13.9 |
| **நிதியியல் பணிகள்** | **11.9** | **1.3** | **-89.3** | **57.2** | **64.6** | **12.9** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **10.3** | **18.0** | **75.3** | **94.2** | **148.4** | **57.5** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **14.4** | **25.6** | **77.8** | **250.8** | **244.5** | **-2.5** |
| தொலைத்தொடர்பு பணிகள் | 2.2 | 5.4 | 149.9 | 53.0 | 50.5 | -4.7 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 12.2 | 20.2 | 65.0 | 197.7 | 193.9 | -1.9 |
| கணனி பணிகள் | 10.2 | 19.1 | 87.7 | 146.8 | 171.5 | 16.8 |
| தகவல் பணிகள் | 2.1 | 1.1 | -46.5 | 50.9 | 22.5 | -55.9 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **33.2** | **60.4** | **82.0** | **343.6** | **563.2** | **63.9** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 5.6 | 10.5 | 88.1 | 72.0 | 99.7 | 38.5 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 10.5 | 19.4 | 84.0 | 121.9 | 194.1 | 59.1 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 17.1 | 30.5 | 78.6 | 149.7 | 269.5 | 80.0 |
| **பிரத்தியேக, கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **2.5** | **2.1** | **-16.3** | **11.0** | **15.2** | **38.2** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 1.8 | 2.0 | 8.0 | 6.1 | 13.9 | 125.9 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 0.7 | 0.1 | -81.4 | 4.9 | 1.4 | -71.8 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **0.8** | **0.3** | **-57.5** | **7.5** | **4.0** | **-46.2** |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு VIII:

# பணிகள் கணக்கு – தேறிய (அ)

| | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2023 (ஐ.அ.டொ. மில்) | 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **பணிகள்** | **329.0** | **369.3** | **12.3** | **3,053.0** | **3,654.5** | **19.7** |
| **தயாரிப்புப் பணிகள்** | **-14.0** | **-9.6** | **-31.4** | **-177.2** | **-185.8** | **4.9** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள்** | **3.6** | **-3.2** | **-186.7** | **36.7** | **36.8** | **0.3** |
| **போக்குவரத்து** | **40.1** | **40.7** | **1.5** | **817.7** | **749.6** | **-8.3** |
| கடல் போக்குவரத்து | 28.6 | 60.3 | 110.8 | 527.5 | 736.2 | 39.6 |
| பயணிகள் | -0.0002 | 0.02 | | -2.9 | 0.2 | -107.2 |
| கப்பல் கட்டணங்கள் | 5.9 | 35.5 | | 180.2 | 359.5 | 99.5 |
| ஏனையவை | 22.7 | 24.7 | 9.0 | 350.3 | 376.6 | 7.5 |
| வானூர்தி போக்குவரத்து | 12.2 | -18.5 | -251.5 | 295.9 | 18.9 | -93.6 |
| பயணிகள் | 6.7 | 2.4 | -64.5 | 62.7 | 2.4 | -96.1 |
| விமான கட்டணங்கள் | -5.1 | -23.4 | 358.0 | 2.8 | -121.5 | |
| ஏனையவை | 10.6 | 2.5 | -76.4 | 230.4 | 138.0 | -40.1 |
| **தபால் பணிகள்** | 0.1 | -1.1 | | -5.8 | -5.5 | -4.1 |
| **பயணம்** | **232.6** | **281.4** | **21.0** | **1,564.9** | **2,413.2** | **54.2** |
| **கட்டடவாக்கம்** | **15.4** | **3.0** | **-80.6** | **244.2** | **85.7** | **-64.9** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 4.8 | 0.05 | -99.0 | 39.1 | -11.3 | -129.0 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 8.7 | 2.3 | -73.4 | 116.7 | 86.3 | -26.0 |
| கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 1.8 | 0.6 | -66.5 | 88.4 | 10.7 | -87.9 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **-0.5** | **-3.6** | | **-16.4** | **-33.5** | **103.8** |
| நேரடி காப்புறுதி | 1.3 | -0.5 | -142.6 | 20.6 | 9.3 | -54.6 |
| மீள்காப்புறுதி | -1.7 | -3.0 | 73.3 | -37.0 | -42.9 | 15.7 |
| **நிதியியல் பணிகள்** | **-5.2** | **1.2** | **-123.9** | **6.8** | **-9.4** | **-238.6** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள்** | **-8.5** | **-16.9** | **99.0** | **-79.5** | **-141.2** | **77.7** |
| **தொலைத்தொடர்பு, கணனி மற்றும் தகவல் பணிகள்** | **63.9** | **64.0** | **0.1** | **665.9** | **727.0** | **9.2** |
| தொலைத்தொடர்பு பணிகள் | 4.8 | 8.8 | 81.9 | 68.7 | 72.5 | 5.5 |
| கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 59.1 | 55.2 | -6.6 | 597.2 | 654.5 | 9.6 |
| கணனி பணிகள் | 60.6 | 54.9 | -9.3 | 640.5 | 669.5 | 4.5 |
| தகவல் பணிகள் | -1.5 | 0.2 | -116.5 | -43.4 | -15.0 | -65.4 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **-1.6** | **11.5** | | **-33.4** | **-23.1** | **-30.9** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | -4.2 | -5.6 | 33.2 | -52.0 | -50.3 | -3.3 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 3.0 | 10.5 | 247.5 | 6.6 | 29.7 | 347.0 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | -0.5 | 6.5 | | 12.0 | -2.5 | -120.7 |
| **பிரத்தியேக, கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **2.1** | **-0.4** | **-117.4** | **24.3** | **3.5** | **-85.6** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | -0.3 | -1.2 | 241.6 | -2.2 | -6.1 | 182.0 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 2.4 | 0.8 | -66.5 | 26.5 | 9.6 | -63.8 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள்** | **1.2** | **1.2** | **-0.5** | **-0.9** | **31.7** | |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி